# ஆதிசக்தி படிப்பகம்

நான் அறிந்தவையையும் பிறரிடம் கேட்டு அறிந்தவற்றையும் கொண்டு கீழ்வரும் விபரங்களை தங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

எனக்கு 16/17 வயதாக இருக்கும் காலங்களில் என எண்ணுகிறேன். அமரர் அருணாச்சலம் இராசரத்தினம், அமரர் சிங்காரம் தில்லையம்பலம், அமரர் கிட்டிணபிள்ளை நாகராசா ஆகியோர் கடற்கரையிலிருந்து மண் சுமந்து வந்து வாசிகசாலைக்கென கட்டப்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் , உயரமாக கட்டப்பட்ட அத்திவாரத்தை நிரப்பும் முயற்சியில் (குடல் மண் எனவும் அழைப்பர்) ஈடுபட்டதை நான் கண்டிருக்கின்றேன்.

எனவே இவர்கள் போன்ற அக்காலத்தில் இளந்தாரிகளாக ( இளைஞர்கள்) இருந்த எனக்கு பெயர் தெரியாதவர்கள் பலரின் முயற்சியிலேயே இப்படிப்பகம் தோற்றம் பெற்றது எனக் குறிப்பிடலாம்.

மேலும் சில தரவுகளை சிவப்பிரகாசம், செல்லச்சாமி போன்றோரைக் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆதிகோவிலடியைச் சேர்ந்த யாரோ பெரியவர் மூலம் நான் கேள்விப்பட்டதாவது, எமது மக்கள் வல்வெட்டித்துறை மீன் சந்தைக்கு (கறிக்கடைக்கு) நாம் பிடிக்கும் மீன்களை கொண்டு சென்று விற்பனை செய்வதே வழக்கம். இதற்காக எமது மீனவர்கள் பிடிக்கும் மீன்களை சுமந்து கொண்டோ அன்றி சிறிய கட்டுமரங்களில் ஏற்றியோ (முருகைக்கு உள்ளால்) கடகங்களில் ஏற்றி கொண்டு செல்வது வழக்கம்.

நானும், நான் கல்வி பயின்ற காலங்களில் சனி, ஞாயிறு ஆகிய பள்ளி விடுமுறை நாட்களில்

1. ஓட்டம் விடுதல்
2. கறிப் பெட்டி ஏற்றல்

எனும் சிறு முயற்சிகளில் ஈடுபட்டு என் குடும்பத்திற்கு உதவியுள்ளேன்.

1. ஓடம் விடல்.

அக்காலத்தில் கடற்தொழில் பரமானந்தராசா என்பவரின் அனுசரணையிலும் வழிகாட்டலிலும் ஆதிசக்தி மீன்பிடி சங்கமும் பல தனிப்பட்டவர்களும் (P.T.R) என பொன்னுத்துரை தங்கராசா ( சல்லியை சேர்ந்தவர்) சாந்தி எனும் பெயரில் ஒரு வள்ளமும் வைத்திருந்தார். இப்படி பலர் வள்ளங்கள் வைத்திருந்தனர்(32 அடி) இவர்கள் முதல் நான் மாலையில் 3,4 பேர் மூலம் வளிச்சல் வலை போன்றவற்றை கொண்டு முனைக்கப்பால் உள்ளஆழ்கடலில் ( பீற்று Bank எனும் மீன்கள் செறிந்து காணப்படும் கடல் திட்டு , இது பருத்தித்துறையிலிருந்து சில மைல்கள் தூரத்தில் வடகிழக்கு திசையில் உள்ளது. … இங்கு தென் இலங்கையர் , இந்தியர் யப்பானியர் போன்றோர் மீன் பிடித்து பலன் பெறுகின்றனர்)

அடுத்த நாள் காலையில் 6,7 மணி போல கரைக்கு வந்து முருகைக்கப்பால் பாரடியில் நங்கூரம் இட்டு காத்திருப்பர். இப்படியான நேரங்களில் இராசா பூபாலு சின்னலி ஆனந்தி போன்ற பலரும் நானும் குத்தடி என அழைக்கப்படும் ( சிறிய நாலுகட்டி … எனும் மரத்திலான மரக்கட்டிகளால் பிணைக்கப்பட்டவை)

இப்படிக் காத்திருப்பவர்களுக்கு “ ஓடம் விடுவோரும்” அதாவது அவர்களிளாலும் மீன்களாலம் 2,3 தடவைகளில் வள்ளத்திலிருந்து கொண்டு வந்து சேர்ப்போம். இதற்காக அநேகமாக சுரு கூலியாக தருவார்கள்( இதன் அப்போதைய பெறுமதி 11.∴4 ரூபா ( இற்கு 5.∴2 ரூபா 25 பலகாரம் ( இடியப்பம், புட்டு, தோசை என்பன) வாங்கலாம்.

இது எமது குடும்பத்தினர் அனைவருக்கும் காலைச்சாப்பாட்டை ஆலடியில் அக்காலத்தில் பலகாரம் செய்து வந்த இலட்சுமிப்பிள்ளை மற்றும் சிவப்பிரகாசம்( தோசைத் தட்டியும்) என்போரிடம் ….

இதேபோல அக்காலத்தில் பலராலும் அறியப்பட்ட பெரும் மீன்வியாபாரிகளான பூமணி மாமி, பெரிய பிள்ளை மாமி(இராமநாதனின் தாயும் குட்டியின் பேத்தியும்), சின்னக்கிளி மாமா( யம்மாற்றுத்துணரின் தாய்)

அமரர் சேதுலிங்கத்தின் தாயார்.

மற்றும் எனது அம்மா சீட்டுக்கார வள்ளியம்மாள் இப்படிப்பட்டவர்களுக்கு எமது சிறிய கட்டுமரத்தில் அவர்கள் தரும் கறிப் பெட்டிகளை வரிசையாக அடுக்கி முருகைக்கல்லுக்கு உள்பட்ட ஆழம் குறைந்த கடலில் தன்னிச் சென்று கறிக்கடையிலிருந்து அவர்களுடன் சேர்ந்து தங்கிச் சென்று ஒப்படைப்போம். ஆதற்காக என்னை போன்றவருக்குரிய கூலி பெட்டிக்கு 25 சதம் இருந்தும் 5 பெட்டிகள் ஏற்றினால் அப்போதும் 1/12 ரூபா உழைப்போம்.

இப்படியான ஒரு காலைப்பகுதியில் ஆதிகோவிலடியைச் சேர்ந்த எம்மவர் சிலர் (ஆண்கள்) கறிக்கடையால் ( வீச்சு மீன், கூட்டு மீன் முதலியவற்றை பறிகளில் சென்று விற்று விட்டு வரும் போது

ஊதயசூரியன் சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட வாசிகசாலையின் அன்றான தினப்பத்திரிகைகளை படித்து வருவது வழக்கம்.

இப்படியான ஒரு கலைக் கூட்டத்தில் மதவடியைச் சேர்ந்த வழமையாக” நீங்கள் ஒருவாசிகசாலையை கட்டலாம் தானே. ஊங்களுக்கு வெட்கமில்லையா எனக் கேட்டிருக்கிறார். ( அவமானங்களும் தோல்விகளுமே வெற்றிக்கு வழிவகுக்கின்றன –FAILURES ARE THE PILLRES OF SUCEEE) என்ற தத்துவத்திற்கிணங்க அந்த நபர் (யாரென எனக்கு தெரியாது) இவ்விடயத்தினை தனது அக்கால இளையர்களான நண்பர்களிடம் கூறியதனால் தான்.

எமது ஊரின் ஒரு படிப்பகம் அமைக்கப்பட வேண்டுமென்னும் கரு உண்டாயிற்று என நான் நம்புகிறேன்.